25th January 1972]

டிருக்கிறது, எத்தனை ஏக்கர் நிலம் விளைச்சல் இல்லாமல் இன்னமும் உப்பு மண்ணாகவே இருக்கிறது? இந்த மாதிரி விஷயங்களை ஆராய்ந்து பார்த்து, நல்ல மண் வளம் உள்ள இடங்களில் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களினால் ஏற்பட்ட பலனைப்பற்றிய விவரம் இல்லாவிட்டாலும்கூட, வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் மூலம் 1,04,102 ஏக்கர் நிலம் பயன் அடையும். அதே போல் 'பிலவுக்கால்' நீர்த் தேக்கத் திட்டத்தால் 10,358 ஏக்கர் நிலம் பயனடையும். மற்றத் திட்டங்களினாலும் ஏராளமான ஏக்கர் நிலம் பயனடைவதாக இருக்கிறது.

*Primary Land Development Bank*

* 34. Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Government have passed any orders recently to stop the opening of branches in all the regions of the Taluk Primary Land Development Banks;

(b) if so, the reasons therefor;

(c) whether the Government's scheme for opening Primary Land Development Banks in the regions has been suspended; and

(d) the reasons therefor?

**ஆரம்ப நிலவள வங்கிகள்**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தாலுகா ஆரம்ப நிலவள வங்கிகள் வட்டாரந்தோறும் கிளைகள் திறக்கப்படுவதை நிறுத்தி விடும்படி அண்மையில் அரசு ஏதேனும் உத்திரவிட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணங்கள் என்ன?

(உ) வட்டாரங்கள்தோறும் ஆரம்ப நிலவள வங்கிகளை நிறுவும் அரசின் திட்டம் தொடர்ந்து செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா?

(எ) அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** (அ) & (உ) இல்லை.

(இ) & (எ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

*Registrar of Co-operative Societies*

* 35 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the number of persons who held the posts of Registrars of Co-operative Societies in the Co-operation Department in our State from 1st April 1967 to 30th June 1971; and

(b) the period for which each one of them held that office?